## சென்னை–6, அரசுத் தேர்வுகள் இணை இயக்குநர்(மேல்நிலை) அவர்களின் செயல்முறைகள்

**முன்னிலை : திரு.க.செல்வ குமார், எம்..ஏ., பி .எட்.,**

**இணை இயக்குநர் (மேல்நிலை),**

**ந.க.எண். 002077 / எப் 1 /2024** **நாள் : 26.02.2024**

பொருள் : மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகள், மார்ச் 2024 – மாற்றுத்திறன் கொண்ட பள்ளி மாணவர்கள் மற்றும் தனித்தேர்வர்களுக்கு தேர்வின் போது சலுகைகள் வழங்கி ஆணையிடுதல் – சார்பு.

பார்வை :

1. அரசாணை (நிலை) எண் 54, பள்ளிக் கல்வி (ஜிஇ1) துறை, நாள் 29.02.2016
2. அரசாணை (நிலை) எண்.62, பள்ளிக் கல்வி (அ.தே) துறை, நாள்.25.03.2022
3. திருநெல்வேலி, தூத்துக்குடி, சிவகங்கை, விருதுநகர், கரூர், நீலகிரி, கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி, நாமக்கல், பெரம்பலூர், ஈரோடு, புதுக்கோட்டை, தஞ்சாவூர், கடலூர், திருப்பூர், திருவாரூர், வேலூர், திருவள்ளூர் மற்றும் சென்னை மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்களின் பரிந்துரை கடிதங்கள் மற்றும் பட்டியல்கள்.

*****

<u>ஆணை</u>

நடைபெறவிருக்கும் மார்ச்–2024, மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத்தேர்வு தொடர்பாக மாற்றுத்திறன் கொண்ட பள்ளி மாணவர்கள் / தனித்தேர்வர்களுக்கு தேர்வின் போது சலுகைகள் வழங்கும் பொருட்டு, பார்வை 2 –ல் உள்ள அரசாணையினை பின்பற்றி தேர்வர்களுக்குள்ள உடற்குறைபாட்டின் அடிப்படையில் சொல்வதை எழுதுபவர், கூடுதல் ஒரு மணி நேரம் தேர்வெழுத அனுமதி, மொழிப்பாட விலக்கு உள்ளிட்ட சலுகைகள் வழங்க பார்வை 3–ல் காணும் மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள் தங்களின் கடிதங்களில், பரிந்துரை செய்துள்ளதை ஏற்று, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் உள்ள தேர்வர்களுக்கு மார்ச் 2024, மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வினை எழுத சலுகைகளை வழங்கி ஆணையிடப்படுகிறது.

மேலும், அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள் தேர்வர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகள் குறித்த விவரத்தினை பதிவெண்களுடன் சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலருக்கும், சம்பந்தப்பட்ட தேர்வு மையத்திற்கும் தெரிவிப்பதுடன், தேர்வு மைய முதன்மை கண்காணிப்பாளரைத் தொடர்புகொண்டு, அத்தேர்வு மையத்தில் தேர்வு எழுதும் மாற்றுத் திறனாளி தேர்வர்களால் கோரப்பட்ட சலுகைகள் பெறப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

பார்வை **1–ல்** காணும் அரசாணையின்படி, சொல்வதை எழுதுபவர் நியமனத்தின்போது கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளை முறைப்படி கடைபிடிப்பது தொடர்பாக உரிய அறிவுரையை சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலருக்கு தெரிவித்து தேர்வினை எவ்வித புகாருக்கும் இடமின்றி நடத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

**ஒம்/–**
**இணை இயக்குநர் ( மேல்நிலை)**

**இணைப்பு:** சலுகைப்பட்டியல்

**பெறுநர்**
அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்,
(பட்டியல்படி)